## சட்டப்பேரவையில் அமைச்சர் கயல்விழி செல்வராஜ் பதிலுரை...

6 ஆம் பக்கத் தொடர்ச்சி

அளித்த சட்டமன்ற உறுப்பினர்கள் அவற்றைத் திரும்பப் பெற்றுக் கொண்டு, இம்மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தர வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அவர்களின் ஆலோசனைப்படியும், வழிகாட்டுதலின்படியும் துறை சார்பாக 19 அறிவிப்புகளை வெளியிடுவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

**அறிவிப்புகள்.**

1. மாணாக்கர் கல்வியில் உயர்ந்த நிலையை அடைவதற்கும் கல்வி பயில சிறந்த சூழலை அமைத்து தரவும் நவீன வசதிகளுடன்கூடிய விடுதிகள் சிவகங்கை, ஈரோடு, கடலூர் மற்றும் விருதுநகர் ஆகிய 4 மாவட்டங்களில் ரூ.15.00 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும். விடுதி மாணாக்கருக்கு ஒருங்கிணைந்த சமையலறைமூலம் உணவு வழங்கும் “அமுத சுரபி” திட்டம். . .

2. திருச்சி, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய மூன்று மாவட்டங்களின் நகர்புரத்தில் உள்ள விடுதிகளில் ரூ.9.00 கோடி செலவில் ஒருங்கிணைந்த சமையலறைமூலம் சுகாதாரமான மற்றும் தரமான உணவு வழங்கும் திட்டம் விரிவுபடுத்தப் படும். இதன்மூலம் 3,000 மாணாக்கர் பயன்பெறுவர்.

விடுதி மாணாக்கருக்கு படுக்கை உபகரணங்கள் அடங்கிய பெட்டகம் ரூ.4.00 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்.

3. பள்ளி மற்றும் கல்லூரி விடுதிகளில் புதியதாக சேரும் மாணாக்கரின் தனிப்பட்ட தேவைகளை நிறைவு செய்யும்விதமாக படுக்கை உபகரணங்களான கம்பளி, போர்வை மற்றும் அன்றாட தேவைக்கான பொருட்கள் அடங்கிய பெட்டகம் ரூ.4.00 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும். இதன்மூலம் 10,000 மாணாக்கர் பயன்பெறுவர்.

பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளை பழங்குடியினரின் தேவை களின் அடிப்படையில் ரூ.13.00 கோடி மதிப்பீட்டில் மறுசீரமைக்கப்படும்.

4. பழங்குடியினர் உண்டி உறை விடப் பள்ளிகளை மறுசீரமைத்தலின் முதற்கட்டமாக திருவண்ணாமலை மற்றும் தருமபுரி ஆகிய மாவட்டங்களில் உள்ள மேல்நிலைப் பள்ளிகளை நவீன முன்மாதிரி பள்ளிகளாகவும், மேலும் சேலம், கள்ளக்குறிச்சி, திருச்சி, பெரம்பலூர் மற்றும் தென்காசி ஆகிய ஐந்து மாவட்டங்களில் உள்ள பள்ளிகளை தேவையின் அடிப்படையில் வாகனவசதி, அறிவுத் திறன் வகுப்பறைகள் போன்ற நவீன வசதிகளுடன் பள்ளிகளை மேம்படுத்தவும் ரூ.13.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பள்ளி மற்றும் கல்லூரி விடுதிகளில் தங்கி பயிலும் மாணாக்கரின் தனித்திறனை வளர்த்துக் கொள்ள ரூ.10.00 கோடி மதிப்பீட்டில் திறன் சார்ந்த திட்டங்கள்.

5. பள்ளி மற்றும் கல்லூரி விடுதிகளில் பள்ளி / கல்லூரி நேரத்திற்குப் பிறகு மாணாக்கர் கலை, அறிவியல், விளையாட்டு, தகவல் தொழில்நுட்பம், மென் மற்றும் பணி திறன்களில் முழுமையான திறனை வளர்த்து கொள்வதற்கு ஏதுவாக ரூ.10.00 கோடி மதிப்பீட்டில் கல்லூரிகளில் “நல்லோசை” சமூக ஆய்வகங்களும், பள்ளி விடுதிகளில் “கற்றல் இனிதே” என்ற திட்டங்கள்மூலம் திறன் சார்ந்த பட்டறைகள், போட்டிகள் மற்றும் பயிற்சிகள் நடத்தப்படும்.

உயர் கல்வியில் சிறந்து விளங்கும் மாணாக்கருக்கு ரூ.41.00 இலட்சம் மதிப்பீட்டில் “உயர் திறன் ஊக்கத் திட்டம்”.

6. உயர் கல்வியில் அதிக மதிப்பெண் பெறும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணாக்கரை ஊக்குவிக்கும்வகையில், அம்மாணாக்கரின் கல்வி இறுதி ஆண்டில் திறன் மேம்பாட்டு பயிற்சிக்கான பணவுறுதி ஆவணம் (Skill Vouchers) வழங்கப்படும். இத்திட்டத்திற்காக ரூ.41.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

முழுநேர முனைவர் பட்டப் படிப்பிற்கான கல்வி ஊக்கத்தொகை திட்டத்தில் பயன் பெறும் பயனாளிகளின் எண்ணிக்கை 1,600லிருந்து 2,000 ஆக அதிகரிக்கப்படும்.

7. முனைவர் ஆராய்ச்சி படிப்புகளில் அதிக மாணாக்கர் கல்வி பயில ஊக்குவிக்கும் வகையில் 1,600 மாணாக்கருக்கு வழங்கப்பட்டு வந்த ஊக்கத்தொகை தற்போது கூடுதலாக 400 மாணாக்கருக்கு வழங்கப்படும். மேலும், இத்திட்டத்தை சீரிய முறையில் செயல்படுத்தும்வகையில் வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்படும். இத்திட்டத்திற்காக ரூ.4.00 கோடி கூடுதலாக ஒதுக்கீடு செய்யப்படும்.

“தொல்குடியினர்” புத்தாய்வுத் திட்டத்திற்காக ரூ.1.50 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

8. பழங்குடியினர் தொடர்பான ஆராய்ச்சி மற்றும் ஆய்வு மேற்கொள்ளும் இளங்கலை, முதுகலை, முனைவர் பட்டம், முனைவர் பட்ட மேலாய்வாளர் (Post doctoral Fellowship) போன்ற இளம் வல்லுநர்களின் திறமைகளை பயன்படுத்தும் வகையில் “தொல்குடி புத்தாய்வுத் திட்டம்” செயல்படுத்தப்படும். இத்திட்டத்திற்காக ரூ.1.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

விவசாயத் தொழிலாளர்களாக உள்ள ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களை நில உடைமையாளர்களாக உயர்த்த நன்னிலம் மகளிர் நில உடைமைத் திட்டத்திற்கு ரூ.20.00 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.

9. விவசாயத் தொழிலாளர்களாக உள்ள ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களை நில உடைமையாளர்களாக உயர்த்தி சமூக நீதியை நிலை நாட்ட இத்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இது மகளிரின் பெயரில் செயல்படுத்தப்படும்.

### அயோத்தி தாசப் பண்டிதர் குடியிருப்பு மேம்பாட்டுத் திட்டத்திற்கு ரூ.230 கோடி நிதி!

இதன்மூலம் விவசாய நிலம் வாங்க நிலத்தின் சந்தை மதிப்பில் 50% அல்லது அதிகபட்சம் ரூ.5.00 இலட்சம் மானியம் வழங்கப்படும். நடப்பு நிதியாண்டில் இத்திட்டத்திற்கென ரூ.20.00 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.

பழங்குடியினர் வாழ்வாதாரத்தினை மேம்படுத்திட புதிய பொருளாதார முன்னெடுப்புத் திட்டங்களை ரூ.25.00 கோடியில் செயல்படுத்துதல்.

10. பழங்குடியினரின் விவசாயம் மற்றும் விவசாயம் அல்லாத தொழில்களை நவீனப்படுத்துதல், பதிவு செய்யப்பட்ட சங்கங்கள் உருவாக்குதல், அரசு/அரசுசாரா நிறுவனங்கள் மற்றும் சமூக அமைப்புகளின்மூலம் திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளித்தல், உற்பத்தி பொருள்களுக்கான தர அடையாளம் (Brand) உருவாக்குதல், சந்தைப்படுத்துதல் போன்ற முன்னெடுப்பு திட்டங்களின்மூலம் பழங்குடியினரின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திட ரூ.25.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. வன உரிமைச் சட்டத்தை விரைவாகவும் திறம்படவும் செயல்படுத்த ரூ.3.00 கோடியில் செயல் திட்டம்.

11. வனங்களைச் சார்ந்து வாழும் பழங்குடியின மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும், பொருளாதார முன்னேற்றத்தை உறுதி செய்யவும் வன உரிமைச் சட்டத்தின்படி அனைத்து உரிமைகளையும் வனவளப் பாதுகாப்புடன் உரிய துறைகளுடன் ஒருங்கிணைந்து செம்மையாகவும், விரைவாகவும் செயல்படுத்திட ரூ.3.00 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.

திருப்பூர் மாவட்டம், முதலிப்பாளையம் மற்றும் ஈரோடு மாவட்டம், ஈங்கூரில் தொழிற்பேட்டை அலகுகளை ரூ.50.00 கோடி மதிப்பீட்டில் புனரமைத்தல்.

12. திருப்பூர் மாவட்டம், முதலிப்பாளையம் மற்றும் ஈரோடு மாவட்டம், ஈங்கூரில் அமைந்துள்ள தாட்கோ தொழிற்பேட்டையிலுள்ள அலகுகளை ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் தொழில்முனைவோரின் நவீன தேவைக்களுக்கேற்ப உடனடியாக தொழில் துவங்குவதற்கு ஏதுவான வகையில் அனைத்து உட்கட்ட மைப்புகளுடனான தொழிற்கூடங்கள் ரூ.50.00 கோடி மதிப்பீட்டில் புனரமை க்கப்படும்.

வீடற்ற அழிவின் விளிம்பில் உள்ள பண்டைய பழங்குடியினருக்கு 4,500 வீடுகள் கட்ட ரூ.70.00 கோடி நிதி ஒதுக்கீடு.

13. வீடற்ற அழிவின் விளிம்பில் உள்ள பண்டைய பழங்குடியினர் மற்றும் இதர பழங்குடியினருக்கு ஊரக வளர்ச்சித் துறையுடன் இணைந்து 4,500 வீடுகள் கட்டித் தரப்படும். இதற்காக ரூ.70.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பழங்குடியினர் குடியிருப்புகளின் அடிப்படை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி தன்னிறைவு அடையச் செய்ய ரூ.100.00 கோடி ஒதுக்கீடு.

14. பழங்குடியினருக்கான சமூக மற்றும் பொருளாதார கணக்கெடுப்பின்மூலம் பழங்குடியினர் குடியிருப்புகளில் கண்டறியப்படும் அனைத்து அடிப்படை கட்டமைப்பு வசதிகளுக்கான தேவைகளை பூர்த்தி செய்வதன்மூலம் தன்னிறைவு பெற்ற குடியிருப்புகளாக மாற்றிட ரூ.100.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான வன்கொடுமைகள் தடுப்புச் சட்டத்திற்கான நெறிமுறை மற்றும் பயிற்சிக்கு ரூ.3.00 கோடி.

15. வன்கொடுமை தடுப்புச் சட்டத்தை திறம்பட ஒருங்கிணைத்து செயல்படுத்த இச்சட்டத்தின்கீழ் பதியப்பட்ட வழக்குகள், பாதிக்கப்பட்டோருக்கு தீருதவிகள், மறுவாழ்வு, கூடுதல் நிவாரணம், சட்ட உதவி கிடைப்பதை உறுதி செய்ய வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்படும். மாவட்ட அளவிலான விழிப்பு மற்றும் கண்காணிப்பு குழு உறுப்பினர்கள், அரசு அலுவலர்கள் மற்றும் தொண்டுசாரா நிறுவனங்களுக்கும் விழிப்புணர்வு குறித்த பயிற்சி அளிக்கப்படும். இத்திட்டத்திற்கென ரூ.3.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பழங்குடியின மக்களின் குடியிருப்புகளை இணைப்பதற்கான அணுகுசாலை வசதிகளை ஏற்படுத்த ரூ.50.00 கோடி ஒதுக்கீடு.

16. பழங்குடியினரின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்திட ரூ.50.00 கோடி மதிப்பீட்டில் அணுகுசாலை வசதிகள் ஏற்படுத்தித் தரப்படும்.

17. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையிலும், தொழில் வல்லுநர்கள் மற்றும் நிபுணர்களை சந்திக்கும் வாய்ப்பை ஏற்படுத்தி கொடுக்கும் வகையிலும் வர்த்தக முனைவோர்களிடையே தொழில்களை மேம்படுத்தும்வகையில் தொழில்முனைவோருக்கான கண்காட்சி மற்றும் கருத்தரங்கம் தாட்கோ மூலம் நடத்தப்படும்.

ஆதி திராவிட மற்றும் பழங்குடியினரின் வாழ்வியல் விழா ரூ.3.00 கோடி மதிப்பீட்டில் நடத்தப்படும்.

18. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரின் பழைமைப் பண்பாடு, காப்பியம், மொழி வழி தேசப்பற்றைக் காட்சிப் படுத்தும் வகையில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரின் வாழ்வியல் விழா ரூ.3.00 கோடி மதிப்பீட்டில் நடத்தப்படும்.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்திட்டங்களின் தரவுகளை மின்பதிப்பாக்கம் செய்ய ரூ.1.50 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.

19. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான மேம்பாட்டுச் செயல் திட்டம் (Development Action Plan for SC/ST), வன்கொடுமை தடுப்புச் சட்டம், தொல்குடி, வன உரிமைச் சட்டம், ஆதி திராவிடர் நல மேலாண்மை அமைப்பு (ADW Management System), விடுதிகள் மேலாண்மை அமைப்பு (Hostel Management System) போன்ற பல்வேறு திட்டங்களின் கட்டமைப்புகளை கண்காணித்தல் மற்றும் கண்காணிப்புச் செயல்படுத்துவதற்கான தொழில்நுட்பத் தீர்வுகள் (Technology Solution) ரூ.1.50 கோடி செலவில் மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு அமைச்சர் திருமதி கயல் விழி செல்வராஜ் பதிலுரை வழங்கினார்.


**பெருநகர சென்னை மாநகராட்சி மின்துறை**

மி.து.ந.க.எண்.சி.பி.மே2/பி1/1349/2023

**குறுகிய கால மறு மின் ஒப்ப அறிவிப்பு**

மின்துறையில் குறுகிய கால மறு மின் ஒப்பம் கண்காணிப்பு பொறியாளர் / மின்துறை அவர்களால் வரவேற்கப்படுகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-5, வார்டு 58ல் ரிப்பன் கட்டிடத்தில் உள்ள மாமன்ற கூடத்தில் இருக்கும் **Analog** ஒலிபெருக்கி அமைப்பை **(Public Addressing System)** மேம்படுத்துவதற்கான சிஸ்டம் சர்வர் மென்பொருள் உள்ளிட்ட டிஜிட்டல் இன்டர்ஃபேஸ் யூனிட்கள், ஆடியோ பவர் ஸ்விட்சிங் சாதனங்கள், கேபிள் மற்றும் துணைக்கருவிகளுடன் புதிய ஐபி அடிப்படையிலான மாடுலர் டிஜிட்டல் ஃப்ளஷ் மவுண்ட் கான்ஃபரன்ஸ் சேர்மன் மற்றும் டெலிகேட் யூனிட்களை வழங்கி, நிறுவி, சோதித்து மற்றும் இயக்கி வைக்கும் பணி.

**பணியின் மதிப்பு : ரூ. 3,37,25,739.70 முன் வைப்புத் தொகை : ரூ. 3,37,260/-**

ஒப்பந்ததாரர்கள் **https://tntenders.gov.in** இணையதளத்தின் மூலம் விவரங்கள் தெரிந்து கொண்டு மின் ஒப்பத்தில் **11.07.2024 முற்பகல் 3.00** மணிக்குள் பங்கேற்கலாம், **12.07.2024 பிற்பகல் 3.15 மணிக்கு** ஒப்பங்கள் திறக்கப்படும்.

செ.ம.தொ.இ / 2154 / ஒப்பந்தப்புள்ளி / 2024

**கண்காணிப்பு பொறியாளர் / மின்துறை**




சைதை கிழக்கு பகுதி 169வது வட்டத்தில் தலைவர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழாவை முன்னிட்டு, அ.தமிழரசன் தலைமையில் கால்பந்து போட்டி நடைபெற்றது. வட்டசெயலாளர் எல்.ஆரோக்கியராஜ், மாவட்ட பிரதிநிதி இரா.சுதாபிரியன், அ.ஆரி, துரைசரவணன், மை. அருள்ராஜ், அ.ஆனந்தராஜ், ஆ.பரணி முன்னிலையில் பகுதிச் செயலாளரும் மண்டலக் குழுத் தலைவருமான இரா.துரைராஜ் போட்டியை துவக்கிவைத்தார். மாலையில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் மாவட்டச் செயலாளரும், அமைச்சருமான மா. சுப்பிரமணியன் வெற்றிபெற்ற அணிகளுக்கு பரிசுத் தொகை மற்றும் கோப்பைகளை வழங்கினார். உடன் சைதை எஸ்.குணசேகரன், சைதை சம்பத், மின்னல் கந்தப்பன், மா.அன்பரசன், மு.ஆரோக்கியம், மு.பாக்கியலட்சுமி, ஏ.மஜீத், நந்தகோபால், ஜெ.கே.தவமணி, ஆர்.மணிமுத்து மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



விக்கிரவாண்டி தொகுதியில் நடைபெறும் இடைத் தேர்தலை முன்னிட்டு தி.மு.க மாநில துணைப் பொதுச் செயலாளரும், ஊரக வளர்ச்சி துறை அமைச்சருமான ஐ.பெரியசாமியுடன் உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல்துறை அமைச்சர் அர.சக்கரபாணி தலைமையில் நூற்றுக்கணக்கான தி.மு.க.வினர் வெற்றி வேட்பாளர் அன்னியூர் சிவாவுக்கு பிரச்சாரம் செய்து உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தனர்.

### தாம்பரம் மாநகராட்சிப் பகுதியில் பாதாள சாக்கடைத் திட்டத்தை புதுப்பித்திடுவீர்!

# பல்லவபுரம் - பம்மல் - அனகாபுத்தூர் சாலையை அகலப்படுத்திடுவீர்!

## சட்டப்பேரவையில் - கழக உறுப்பினர் இ.கருணாநிதி கோரிக்கை!



**சென்னை, ஜூலை 2– சட்டப்பேரவையில் நேற்று முன்தினம், மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் பங்கேற்றுப் பேசிய பல்லவபுரம் தொகுதி கழக உறுப்பினர் இ.கருணாநிதி “பல்லவபுரம் – பம்மல் – அனகாபுத்தூர் சாலையை அகலப்படுத்தும் பணியை உடனடியாகத் தொடங்கிடுவீர்!” எனக் கோரிக்கை விடுத்தார்.**

*சட்டப்பேரவையில் அவர் பேசியதாவது:*

*“திராவிட மாடல் என்பது எதையும் இடிக்காது, உருவாக்கும்; திராவிட மாடல் என்பது எதையும் சிதைக்காது, சீர்செய்யும்; திராவிட மாடல் என்பது யாரையும் பிரிக்காது, அனைவரையும் ஒன்று சேர்க்கும்; திராவிட மாடல் என்பது யாரையும் தாழ்த்தாது, அனைவரையும் சமமாக நடத்தும்; திராவிட மாடல் என்பது யாரையும் புறக்கணிக்காது, தோளோடு தோள் நின்று அரவணைக்கும்” என்று கூறி பொற்கால ஆட்சி நடத்தி வரும் எங்கள் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு இந்த மானியக் கோரிக்கையில் கலந்து கொண்டு பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.*

*பகைக் கூட்டத்தை 29 பைசா என விளம்பரம் செய்து போர் முரசு கொட்டிய தீரர், வஞ்சகர் கூட்ட சூழ்ச்சிகளின் வேர் அறுத்து வென்று நிற்கும் விடகாரி, எங்கள் இளைஞரணிச் செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு என் வணக்கம். அவை முன்னவர் அவர்களுக்கும், மாவட்ட அமைச்சர் அன்பரசன் அவர்களுக்கும், நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர். பாலு அவர்களுக்கும், பேரவைத் தலைவர் அவர்களுக்கும், சட்டப்பேரவைக் கொறடா அவர்களுக்கும் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.*

*பொதுத் துறை மானியக் கோரிக்கையில் ஒருசில கருத்துகளைச் சொல்ல விரும்புகிறேன். பொதுத் துறை என்பது ஒரு முக்கியமான துறை. குறிப்பாக, ஆளுநர் அலுவலகம், அவர் இல்லப் பராமரிப்புப் பணிகள், அமைச்சர்கள், பணி நியமனம் அதன் தொடர்பான பணிகள் முதலமைச்சர் மற்றும் அலுவலர் பணிகள் அமைச்சர் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்தல், தேசிய ஒருமைப்பாட்டுக் குழு, பன்மாநிலக் குழு மற்றும் தென் மண்டலக் குழு, மத்திய-மாநில அரசுகளுடன் இடையே உள்ள உறவுகள். சென்னை, உதகமண்டலம் மற்றும் புதுடெல்லியில் உள்ள அரசு விருந்தினர் இல்லம், நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி அலுவலர்கள் இவர்கள் எல்லாம்-- நீதிபதிகள், உயர் நீதிமன்ற சட்ட அலுவலர்கள் நியமனம் சட்டம் ஒழுங்கு, மாநில மனித உரிமை ஆணையங்கள் போன்ற பல்வேறு விவகாரங்கள் இந்தப் பொதுப் பணித் துறையின்கீழ் வருகின்றன.*

*ஒன்றிய அரசு கூட்ட வேண்டிய பன் மாநிலக் குழு, தென் மண்டலக் குழு, தேசிய ஒருமைப்பாட்டுக் குழு ஆகியவை இதுவரை கூட்டப்படவில்லை. இதனால்தான் இந்திய நாட்டில் ஏற்பட்டுள்ள, நதிநீர்ப் பிரச்சினை, மொழிப் பிரச்சினை, மாநில நிதிப் பிரச்சினை, பொருளாதாரப் பிரச்சினை, மத நல்லிணக்க பிரச்சினை, நிதி தொடர்பான பிரச்சினைகள், GST போன்ற வரிப் பிரச்சினைகள், சிறுபான்மை மக்கள் தொடர்பான பிரச்சினைகள் பற்றி பேசிட வாய்ப்பு வழங்கப்படவில்லை. இவ்வாறான பிரச்சினைகள் தீர்க்கப்பட ஒன்றிய அரசு இதுவரை முன்வரவில்லை என்பதைத் தங்கள் மூலமாக தெரிவிக்க விரும்புகின்றேன்.*

*நிதித் துறையைப் பொறுத்தவரையில், நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்கள், 22-8-2024 அன்று புதுடில்லியில் ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற Budget-க்கு முந்தைய ஆலோசனைக் கூட்டத்தில் கலந்துகொண்டார். இரு பெறும் வெள்ளப் பேரிடர்களைச் சந்தித்த தமிழ்நாட்டிற்கு வெறும் ரூ.276 கோடி மட்டுமே ஒதுக்கிய ஒன்றிய அரசு தமிழ்நாட்டிற்கு இழைத்த மிகப்பெறும் அநீதி என அக்கூட்டத்தில் கடுமையாக விமர்சனத்தோடு வலியுறுத்திப் பேசித் திரும்பியுள்ளார்.*

*சென்ற ஆண்டில் அடுத்தடுத்து இரண்டு இயற்கைப் பேரிடர்களை தமிழ்நாடு எதிர்கொள்ள நேரிட்டபோதிலும், தமிழ்நாட்டிற்கு நிதியை வழங்காத அரசு மத்திய அரசு. மாபெரும் சேதத்தைக் கருத்தில்கொண்டு, அதற்காக இரண்டு விரிவான அறிக்கைகளை அளித்து பேரிடர் நிவாரண நிதியான ரூ.37,906 கோடி தமிழ்நாடு அரசு கோரியிருந்தது. ஆனால், ஒன்றிய அரசு ரூ.276 கோடி மட்டுமே ஒதுக்கியுள்ளது என்பதை இந்த அவையில் நினைவுபடுத்த விரும்புகிறேன்.*

**ஒன்றிய அரசின் வரிப் பகிர்வு!**

*ஒன்றிய அரசின் வரிப் பகிர்வு, தமிழ்நாட்டிற்கு அரசு திருப்பி அளித்த வரிகள், 0.29 பைசா. கர்நாடக அரசிற்கு 16 பைசா, தெலுங்கானா அரசிற்கு 40 பைசா, கேரள அரசிற்கு 60 பைசா, உத்திரப்பிரதேச அரசிற்கு 2.20 பைசா, மத்தியப் பிரதேச அரசிற்கு 1.70 பைசா, இப்படி பல்வேறு மாநிலங்களில் தற்போது மோடி தலைமையிலான அரசு பதவி ஏற்றதும் (ஜூன்) மாநிலங்களுக்கான வரிப் பகிர்வு செய்திருந்தது 1.35 இலட்சம் கோடி. அதிகபட்சமாக உத்திர பிரதேச மாநிலத்திற்கு ரூ.85,066 கோடி ஒதுக்கீடு. பீகார் மாநிலத்திற்கு ரூ.14,056 கோடி, மத்தியப் பிரதேசத்திற்கு ரூ.10,970 கோடி ஒதுக்கீடு, ஆனால் தமிழநாட்டிற்கு மட்டும் வெறும் ரூ.5,700 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதை இந்த மாமன்றத்தில் நான் தெரிவிக்க விரும்புகிறேன்.*

*எரிசக்தி-மின்சாரம், மாநிலத்தில் எரிசக்தி 14,000 மெகாவாட் மின்சாரம் இருந்த நிலையில், தற்போது மின்தேவை அதிகரித்துவருகிறது. சென்னைப் புறநகர்ப் பகுதிகளிலெல்லாம், அடுக்குமாடிக் கட்டடங்கள் உருவாகிக்கொண்டிருக்கின்றன. கடந்த ஏப்ரல், ஜூன் மாதங்களில் ஏறத்தாழ 21,000 மெகாவாட் மின்சாரத்தை வழங்கி, மக்களின் மனதைக் கவர்ந்துள்ளது, இந்த அரசு. அதேநேரத்தில், மாநிலத்தின் மின் உற்பத்தியைப் பெருக்கிட வேண்டிய அவசியம் உள்ள நிலையில், இன்று மின்சாரம் அதிகம் தேவைப்படுகிறது. அடிக்கடி மின்சாரம் இடைநிறுத்தம் இல்லாமல் கிடைப்பதற்காக, அனல் மின்சக்தி, புனல் மின்சக்தி, சூரிய மின் ஆற்றல், அணுமின்சாரம், காற்றாலை மின்சாரம் ஆகியவற்றை பயன்படுத்த வேண்டுமெனக் கோருகிறேன். 2030-ஆம் ஆண்டிற்குள் மொத்த மின் உற்பத்தியில் 50 சதவிகிதத்திற்குமேல் புதுப்பிக்க ஆற்றலின் பங்களிப்பு இருக்கும் வகையில், பசுமை மாநிலமாக தமிழ்நாட்டை மாற்றிட சிறப்பு நிறுவனம் ஒன்றை ஒன்றிய அரசு உருவாக்க உள்ளதையும் நான் வரவேற்று நன்றி கூறுகிறேன். 2030-ஆம் ஆண்டிற்குள் 33,000 மெகாவாட் அளவு உயர்த்த தமிழ்நாடு அரசு முடிவு செய்து. இரட்டிப்பு ஆக்கிட இருப்பதையும் வரவேற்கிறேன்.*

*கலைஞர் அவர்களால் கொண்டுவரப்பட்ட சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு நிதியைப் பொறுத்தவரையில், 1989 ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி என்ற மாபெரும் திட்டத்தைத் தொடங்கிவைத்தார்கள். இத்திட்டத்தின்மூலமாக, தொகுதிகளில், சாலை, விளக்கு, குடிநீர், கழிப்பிட வசதி, பள்ளிக்கூடங்கள், கல்வி நிலையங்கள் சத்துணவுக் கூடங்கள், மருத்துவமனைகள் போன்ற மக்களின் அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்ய உதவுகிறது.*

*இத்திட்டத்தைப்போல் ஒன்றிய அரசும், நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதித் திட்டம் கொண்டுவரவும், கலைஞர் தான் காரணமாக இருந்தார் என்று இந்த அவையில் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். தற்போது சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு நிதியை பொறுத்தவரையில், நமது சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களுக்கும் சேர்த்து கூறிக்கொள்கிறேன், ரூ.3 கோடி ஒதுக்கீடு செயல்பட்டுவருகிறது. அதை ரூ.5 கோடியாக உயர்த்தித் தர வேண்டும் இங்கிருக்கின்ற உறுப்பினர் பலர் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அது மட்டுமல்ல, ரூ.3 கோடி அளித்தால், 18%- ரூ.2,64,000 பிடித்துவிடுகிறார்கள்.*

*அப்போது மீதம் இருக்கும் தொகை 2 இலட்சத்து சில்லறைதான். இதை வைத்து அந்தப் பணிகளைச் செய்ய முடியவில்லை. 2 இலட்சம் வாக்காளர்களுக்கும் 3 கோடி, எங்களைப் போன்ற ஆலந்தூர், தாம்பரம், பல்லாவரம், செங்கல்பட்டு, சோளிங்கநல்லூர் ஆகிய பகுதிகளில் உள்ள 4 இலட்சம் வாக்காளர்களுக்கும்மேல் உள்ளவர்களுக்கும் அதே 3 கோடிதான். அதில் நாங்கள் செலவு செய்வது 2 கோடியே 46 இலட்சம் தான் வருகிறது வரிகள் போக ஆக இந்தத் தொகை போதுமானதாக இல்லை. கருணை உள்ளம் கொண்ட முதல்வர் அவர்கள் 5 கோடியாக உயர்த்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மக்கள் நலனே முக்கியம். தமிழ்நாடும், தமிழ்நாட்டு மக்களும் மகிழ்ச்சியாக இருக்கும்போது, அதைவிட எனக்கு வேறு என்ன வேண்டும். எனக்கு மக்களைப் பற்றித்தான் எப்போதும் நினைவை தவிர என்னைப் பற்றி இருந்ததே இல்லை, எந்தச் சூழ்நிலையிலும் மக்களோடு இருப்பவன் நான் என் சக்தியை மீறி உழைப்பவன் என்று சென்னை வர்த்தக மையத்தில் நடந்த அயலகத் தமிழர் தினம் விழாவில் முதல்வர் தளபதி அவர்கள் பேசியிருப்பதை தெரிவிக்கிறேன். என்னுடைய தொகுதி கோரிக்கையை மட்டும் பல்லாவரம், அனகாபத்தூர் சாலையை விரிவுப்படுத்திட வேண்டும் என்பது நீண்டநாள் கோரிக்கை. தாம்பரம் மாநகராட்சிப் பகுதிகளிலுள்ள பாதாள சாக்கடைத் திட்டங்கள் சுமார் 25 ஆண்டுகளுக்கு முன்பு அந்தத் திட்டம் போடப்பட்டது. அதை புதுப்பிக்க வேண்டும். அதற்காக 86 கோடி ரூபாய் அனுப்பியுள்ளது. அதையும் நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். திருநீர்மலை ஏரி பல்லாவரம் தொகுதியில் உள்ள 135 ஏக்கர் 135 ஏக்கர் உள்ள திருநீர்மலை ஏரி மிகப் பெரிய ஏரி சென்னை சேத்துபட்டில் படகு குழாம் இருக்கிறது. சென்னை புறநகர்ப் பகுதியில் படகு குழாம் எதுவும் இல்லை. அது அமைப்பதற்காக பல முறை சட்டமன்றத்தில் நான் பேசியிருக்கிறேன். ஆக, அதற்கு நிதி ஒதுக்கீடு செய்து. .*

*என்னுடைய தொகுதியில் இருக்கிற பல்வேறு பிரச்சினைகளை நான் உங்களிடம் பேசியதாகக் கருதி தொகுதி கோரிக்கையாக அளிக்கிறேன். அவற்றைப் பதிவு செய்து கொள்ளுங்கள் என்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றிகூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.*

**தொகுதி கோரிக்கைகள்**

*திருநீர்மலை ரங்கநாதர் பெருமாள் கோயில் பகுதியில் உள்ள ஏரியை தூர்வாரி ஆழப்படுத்தி பொதுமக்கள் நடைபயிற்ச்சி செய்யும் வகையில் மற்றும் மின்விளக்கு அமைத்து, படகு குழாம் அமைத்து சுற்றுலாத் தளமாக அமைக்கும் திட்டத்தை செய்ல்படுத்தி தர வேண்டும்.*

*பல்லாவரம் பம்மல், அனகாபுத்தூர் சாலையை அகலப்படுத்தும் பணியை உடனடியாக தொடங்க ஆவன செய்ய வேண்டும்.*

*தாம்பரம் மாநகராட்சி பல்லாவரம் - குரோம்பேட்டை பகுதியில் பழுதடைந்த பாதாள சாக்கடை திட்டத்தை செயல்படுத்தி, புதியதாக குழாய்கள் அமைத்து தர வேண்டும்.*

*பல்லாவரம், குரோம் பேட்டை, திருநீர்மலை, பம்மல், அனகாபுத்தூர், அஸ்தினாபுரம் ஆகிய பகுதிகளில் ஒருங்கிணைந்த மழைநீர் கால்வாய்கள் அமைக்கும் திட்டத்தை செயல்படுத்தித் தர வேண்டும்.*

*தாம்பரம் மாநகராட்சிக்கு குப்பைகள் கொட்டுவதற்கு ஒரு இடம் வருவாய்த்துறை மூலம் தேர்வு செய்து தர வேண்டும்.*

*குரோம்பேட்டை குமரன்குன்றம் பிரசன்னா யோக ஆஞ்சநேயர் திருக்கோயிலுக்கும் பெருமாள் திருக்கோயிலுக்கும் குடமுழுக்கு மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.*

*தாம்பரம் மாநகராட்சி பல்லாவரம் பகுதியில் மேம்பாலத்திற்கு, மறைந்த தமிழ் தென்றல் மறைமலை அடிகளார் பெயரை சூட்டி செயல்படுத்தி தர வேண்டும்.*

*பல்லாவரம்கீழ்கட்டளை பகுதியில் வீட்டுவசதி வாரியத்திற்கு எதிராக உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை மேல்முறையீடு செய்து உரிமையாளர்களுக்கு அங்கிகாரம் கிடைக்க வழிவகை செய்து தர வேண்டும்.*

*திரிசூலம் ஊராட்சிக்கு இரயில்வே சுரங்க பாதை அமைக்க வேண்டும்.*

*மீனம்பாக்கம் முதல் இரும்புலியூர் வரை உயர் மட்ட மேம்பாலம் அமைக்க வேண்டும்.*

*இவ்வாறு இ.கருணாநிதி பேசினார்.*